# மனனப் பகுதி - தரம் 7

## திருவிவிலியப் பகுதி

1. அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது, அவர்களுக்குப் பதிலளிப்பேன் அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன் அவர்களைத் தப்புவித்து அவர்களைப் பெருமைப்படுத்துவேன் (திருப்பாடல் 91:15)

2. ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார், பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றார், சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார். (திருப்பாடல் 146:7)

3. அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார் உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். (திருப்பாடல் 103:3)

4. கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார் இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே. (திருப்பாடல் 46:1)

5. ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு, யாருக்கு நான் அஞ்சவேண்டும்? ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம், யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்? (திருப்பாடல் 27:1)

6. அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்ந்திடுக! அல்லேலூயா! (திருப்பாடல் 150:6)

7. என் கடவுளே! என் எதிரிகளினின்று என்னை விடுவித்தருளும் என்னை எதிர்த்து எழுவோரிடமிருந்து எனக்குப் பாதுகாப்பளித்தருளும். (திருப்பாடல் 59:1))

## திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை

8. இவர் தூய ஆவியாரால் கருவுற்று தூய கன்னிமரியாவிடமிருந்து பிறந்தார். பகுதி – (3)

9. பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். பகுதி – (4)

10. பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பகுதி – (5)